# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 3

அஞ்ஞானம் நீடிக்கும்வரை அமைதியின்மையும் இருந்தே தீரும். சுக சௌகரியங்களோடு வாழவேண்டும் என்ற ஆசை மறையாதவரை, விருப்பங்களை நிறைவேற்றி கொள்ள வேண்டும் என்ற ஆசையின் தாண்டுதல் இருக்கும் வரை செய்யும் செயல்களின் மாற்றத்தால் மட்டும் திருப்தியைப் பெற முடியாது, தட்டுமுட்டுச் சாமான்களை மாற்றிப்போடுவதால் மட்டுமே இருளைப் போக்கிவிட முடியாது. எப்படியாவது விளக்கை ஏற்றினால், பொருள்களின் அமைப்பை மாற்றாமலேயே இருளைப் போக்கிவிடலாம்.

அதுபோலவே இந்த இருள் ஆழ்ந்த உலகில் யார்மேலும் மோதிவிடாமல் அமைதியாக, நேர்மையாக, உண்மையாக நடந்து கொள்வது என்பது எளிய செயலாக இல்லை . பின் இதற்கு வழிதான் என்ன ? ஞானம் என்றும் விளக்கை ஏற்று, எல்லாச் சிக்கல்களும் நீங்கிவிடும். தர்மத்தின் வழியில் நடப்பதாக கூறுவார்கள்! ஆனால் செயல்கள் தெய்வ சமர்ப்பணமாக இருப்பதில்லை. எல்லாச் செயல்களையும் தெய்வத்துக்கு அர்பணித்துவிட வேண்டும் என்கிறார்களே, தெய்வத்தின் பெயரால் யாரையாவது கொலை செய்யலாமா என்று சில கோணல் புத்தி படைத்தவர்கள் கேட்கிறார்கள். சொல்லும், செயலும், நினைவும் புனிதமாக இல்லாத மனிதனுக்கு எல்லாச் செயல்ளையும் தெய்வ சமர்ப்பணமாகச் செய்யும் மனநிலை மட்டும் எப்படி உண்டாகும்? ஆண்டவரிடம் அடிமைப்பட்ட பக்தனுக்கு அன்பு, நேர்மை, சமதிலை, அகிம்சை ஆகிய நற்பண்புகளே தோழர்கள். அவனிடம் கொடுமையும் குரூரத் தன்மையும் தோன்ற வழியே இல்லையே! அவனால் ஓர் உயிருக்கு எப்படித் தீங்கிழைக்க முடியும்? தன்னலமின்மை, தியாக உணர்வு, ஆன்மிகச் சிறப்பு ஆகியவைகளைக் கொண்ட மனிதனால் தான் எதையும் தெய்வ சமர்ப்பணமாகச் செய்ய முடியும். இந்த நற்பண்புகள் இல்லாத மனிதன் செய்யும் எந்தச் செயலும் தெய்வ சமர்ப்பணமாக இருக்க முடியாது.

அறத்தை வெளிப்படுத்தும் செயல்கள் எல்லாம் அழிவற்றவை. தான் அழிவற்றவன், அமரத்துவம் பெற்றவன் என்ற உண்மையை அறிந்த மனிதனால்தான் தர்ம நிருபமணமான செயல்களைச் செய்ய முடியும் அதுவே

மனிதன் செய்யக்கூடியவைகளிலெல்லாம் உயர்ந்த செயல் இந்த நிலையை அடைய முடியாமல், அறத்துக்கு மாறான செயல்களைச் செய்வதன் மூலம் மனிதன் தன்னைத் தானே தாழ்த்திக்கொள்கிறான். தான் அமரத்துவம் பெற்றவன் என்ற நிலையில் இருந்து அழிய கூடியவன் என்ற நிலைக்குத் தன்னை இறக்கிக் கொள்ளுகிறான். அமிர்கத்தைக் கையில் வைத்துக் கொண்டு, புலனாசை என்றும் நஞ்சை அருந்துகிறான். பிரபஞ்சத்தின் மூலாதாரப் பொருளான பரமாத்மாவைத் தியானிப்பதால் ஏற்படும் ஆனந்தத்தை அசட்டை செய்துவிட்டு, மாயத் தோற்றமான உலகியல் வாழ்க்கை என்னும் வலையில் தானே போய் நழைந்து கொண்டு, சிக்கலில் அகப்பட்டுத் தவிக்கிருன். அது அந்த மனிதனின் விதி என்று இரக்கப்படுவதைத் தவிர வேறு என்ன செய்வது!

கீதையில் பதினான்காவது அத்தியாயத்தில், "பிரம்மம் என்னும் ஆதாரப்பொருள் நானே, உண்மையான அமரத்துவம் பெற்றவர் நானே. சாஸ்வதமான தர்மம் நானே. நித்தியமான பேரின்பம் நானே என்னும் பொருள் கொண்ட சுலோகம் உள்ளது.

**" பிரம்மனோ ஹிப்ரதிஷ்டாறஹ மம்ருதஸ் யாவ்ய யஸ்ய ச**
**சாஸ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யை காந்தி கஸ்ய ச**

இந்த அம்ருததர்மம் பற்றி உபநிடதங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. இதை உபநிடத்தின் சாரமாதலால், கீதையிலும் இது அழுத்தமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அறவழியில் செல்லும் வாழ்க்கையே ஆத்மாவின் சாரம். அதுவே ஆக்மசாட்சாத்காரத்துக்கான நேர் வழி. அந்த வழியைப் பின்பற்றுபவனே இறைவனுக்கு உகந்தவன். யாருடைய செயல்கள் தர்மத்தைச் சார்ந்திருக்கின்றதோ, அவர்களிடம் தான் இறைவன் வாழ்கிறன். அதனால் தான், கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனைக் குறிப்பிட்ட சில சிறப்புப்பண்புகளை வளர்த்துக் கொள்ளும்படி உபதேசிக்கிறார். அந்தத் தன்மைகள் ஆத்மதர்மத்தைப் பயில உதவும். அவை கீதையில் பனிரெண்டாம் அத்தியாயத்தில் பதின்மூன்றிலிருந்து பத்தொன்பது முடிய ஏழு லோகங்களில் விவரிக்கப்பட்டுள்ளன, கீதையை ஊன்றிப் படித்தவர்களுக்கு இது நினைவுக்கு வரும். அதில் கீழ்க்கண்ட சுலோம் மிக முக்கியமானது.

**யேது காம்யாம்ருக மிதம் யதோக்தம் பர்யூபாஸதே**
**ச்ரத்ததானா மத் பரமா பக்தாஸ் தே தீ மேப்பிரியா II**

இந்த சுலோகம் வெளியிடும் கருத்துக்கள்தான் எவ்வளவு உயர்ந்தது என்று பாருங்கள். எப்படிப்பட்ட பண்பு கனை வயார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறும் சுலோகங்களில் இது முடிவானது எல்லாப் பண்புகளையும் ஒன்று சேர்த்து தர்மயாம்ருதம் என்கிறது. அதாவது அழியாமையை அளிக்கும் அறவழி என்கிறது கீதை. "இந்த நற்குணங்கள் உடையவனாய், என்னையே பற்றுக் கோடாகக் கொண்டு, உறுதியான நம்பிக்கையோடு ஒரு நிலைப்பட்ட மனத்தோடு என்னையே சரணடைந்தவன் எனக்கு மிகவும் பிரியமானவன்'' என்று ஸ்ரீ கிருஷ்ணன் உறுதியளிக்கிறார்.

தர்மயாம்ருதம் என்ற சொல்லை உபயோகப்படுத்தியிருக்கும் விதத்தைக்கவனியுங்கள். அதில் மனத்தை நிறுத்தி உற்சாகம் பெறுங்கள். இறைவனின் கிருபை என்றும் அமிர்தம். இறைவன் காட்டும் அறவழியில் செல்பவர்களுக்குத் தான் அது கிட்டும். மனிதர்கள் இறைவனிடம் தாங்கள் பக்தி பூண்டிருப்பதாக நம்புகிறார்கள். ஆனால் இறைவனும் தம்மிடம் அன்பு கொண்டிருக்கிறாரா என்று சிறிதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இந்த விதமான விசாரணை செய்பவர்கள் அரிதே. ஆனால் இதுதான் ஆன்மிக வெற்றிக்கான அளவுகோல். ஒரே மனிதன் குடிமக்களுக்கு அரசனாகவும், பெற்றோருக்கு மகனாகவும், எதிரியான நாட்டுக்குப் பகைவனாகவும், மனைவிக்கு கணவனாகவும், மகனுக்குத் தந்தையாகவும் இருக்கிறான். அதாவது, ஒரே மனிதன் பல வேடங்கள் ஏற்றிருக்கிருன். ஆனால், ''நீ யார்" என்ற கேள்விக்கு, மேற்கண்ட உறவில் ஏதாவது ஒன்றைச் சொல்லுவானேயாகில் அது உண்மையல்ல. இந்த உறவுகள் அனைத்தும், உலகியல் உறவையும் தொழிலையும் குறிப்பவைகளே. அல்லது தான் என்பது தலை, கை, கால் என்றும் சொல்ல முடியாது. அவைகள் இந்த அழியும் உடலின் அங்கங்களே. ஆதாரமான பரம்பொருளை பிரம்மத்தை - மறைத்து நிற்கும் பெயர்கள், உருவங்கள், அங்கங்கள் அனைத்துக்கும் அப்பாற்பட்டவன் அவன். அவனை, 'நான்' என்று குறிப்பிடப்படுகிறது. இதை மனத்தில் நிறுத்தி, சிந்தித்து நான் என்பது என்ன என்ற உண்மையைக் கண்டுபிடிக்க முயலுங்கள்.

உன்னுடைய உண்மை உருவம் எது என்று விசாரணை செய்து புரிந்து கொள்வது என்பது சிரமமான செயலே உள் உண்மைத் தன்மையையே புரிந்து கொள்வது சிரமமான இருக்கும்போது மற்றவைகளின் உண்மைத்தன்மையை மிக நன்றாக அறிந்து கொண்டது போல் தீர்ப்புக் கூறுவது எவ்வளவு அறிவீனம்! நீ என்றும் நான் என்றும் குறிப்பிடுவது இந்த உடலையே, மாயத் தோற்றத்தையேதான். அதுவே உண்மை அல்ல. ஆன்மா ஒன்று தான் உண்மைப்பொருள்; ஏகமான, பிரிக்க முடியாத பொருள். அதை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்படும் அறங்களே உண்மையான தர்மங்கள். அதாவது ஆத்ம தர்மம் எனப்படும்.

''எப்பொழுது பார்த்தாலும் ஆத்மா, ஆத்மா என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, ஆத்மாவின் உருவம் எப்படிப்பட்டது, அதன் அமைப்பு எவ்வாறிருக்கும் என்று உங்களில் சிலர் கேட்கலாம். ஆத்மாவுக்கு உருவம் இல்லை. அது நித்தியமானது, மாற்றம் அடையாதது, அழிவற்றது, உத்தமமானது, சத்தியமானது நன்மை பயப்பது, நிலையானது, மாசற்றது; எந்த ஒரு பெயரையும் உருவத்தையும் தந்து, அதை ஒரு வரையறைக்குள் கட்டுப்படுத்த முடியாது. அதைப் புரிந்து கொள்ளத்தான் இயலுமே தவிர காண முடியாது. அதுவும், நற்செயல்களின் மூலமாகப் பெறும் ஞானத்தின் துணைகொண்டு அதைப் புரிந்து கொள்ளலாம். உடலுக்கு மட்டுமே பெயரும், உருவமும் உண்டு. உடலின் துணைகொண்டு இயற்றப்படும் ஒவ்வொரு செயலிலும் ஆத்ம தர்மத்தை வெளிப்படுத்த வேண்டும். ஆத்ம தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆற்றப்படும் அறச் செயல்களே ஆத்ம தர்மம் எனப்படும்.

ஆத்மா ஆணுமல்ல, பெண்ணுமல்ல; ஆடு மாடுகள் அல்ல, குதிரையோ, பறவைகளோ, மரமோ அல்ல. ஆத்மாவை இந்த விதமாகப் பாகுபாடு செய்ய முடியாது. இதற்கெல்லாம் அப்பாற்பட்டது ஆத்மா. ஆத்மாவை இந்த விதமான மாறுதலுக்குள் கட்டுப்படுத்த முடியாது. அது 'சத்'' என்ற சொல்லின் மூலம் குறிக்கலாம். (மூன்று காலங்களிலும் உள்ளது என்று பொருள்) எல்லாப் பொருள்களின் கூட்டுத் தொகையும் அதன் சாராம்சமும் ஆத்மாவே. எல்லையற்ற, தனித் தன்மை பொருந்திய பரமாத்மா அது. மற்றவைகள்

எல்லாம் பொய்மையாவைகள், மாறுதலடையக் கூடியவைகள், கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவைகளே. இவைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவது எளிது. ஆத்மாவைக் குறிப்பிட்டுக் காட்ட முடியாது.

பல்லக்கை எடுத்துக் கொள்ளுங்கள். பல்லக்கைச் செய்யுமுன் அது மரமாக இருந்து, பின்னர் மரத் துண்டாகி, சட்டங்கள் பலகைகளாக உருவெடுத்தது. இறுதியில் பல்லக்காக மாற்றப்பட்டது. மரத்தின் உருவம் மாறுதலடையும் போது, ஒவ்வொரு மாறுதலுக்கும் ஒவ்வொரு பெயரைப் பெறுகிறது. பல்லக்கில் அமர்ந்துள்ள மனிதன் தான் மரத்தின் மேல் அமர்ந்திருப்பதாகக் கூறுவதில்லை, அல்லவா? பொருட்கள் அனைத்துமே மாறுதலடையக் கூடியவைகளே. அவைகள் நிலயானவை அல்ல; உண்மை பொருள் அல்ல.

பொருள்களை அவைகளின் உருவம் பெயர் இவைகளைக் கொண்டு வித்தியாசப்படுத்திக் குறிப்பிடலாம். அவைகளின் இயல்புகளை கொண்டு அவைகளை விளக்கலாம். அவைகள் எல்லாம் செயற்கையானவை. நிலையற்றவை. நாற்காலி என்பது என்ன? ஒரு குறிப்பிட்ட மாறுதலையடைந்த மரத் துண்டு. அல்லவா? மரத்துண்டுகளை நீக்கிவிடு. நாற்காலியே மறைந்துவிடுகிறது. நாற்காலியை உருவாக்கிய மரத்தைப் பார்க்கும்போது நாற்காலி கண்களுக்குப் புலப்படுவதில்லை. அதைப் போன்றவைதான் தர்மங்களும். வர்ணதர்மம், கிருஹஸ்த தர்மம், வானப்ரஸ்த தர்மம், சன்னியாசதர்மம், பிரம்மச்சரிய தர்மம், இந்த தர்மம், அந்த தர்மம் அனைத்தும் நாற்காலி, பெஞ்சுகள், பல்லக்கு என்பவைகளைப் போல அடிப்படை தர்மத்தின் ஆத்ம தர்மத்தின் அங்கங்களே. அவைகளின் இயற்கைத் தன்மையை ஊன்றிக் கவனித்தால், அந்த வித்தியாசங்கள் மறைந்து, விடுகின்றன செய்பொருட்கள் மறைந்து மரம் மட்டுமே நிலைத்திருப்பது போல, காரண தர்மங்கள் மறைந்து ஆத்ம தர்மம் மட்டுமே ஒளிவிட்டு மிளிர்கிறது; அது மட்டுமே நிலையானது என்பதையும் உணரலாம்.

உலகில் வாழவேண்டியிருப்பதால், உலகியல் தர்மங்களும் முழுமையானவைகளே. அவைகளைப் பயனற்றவைகள் என்று நான் சொல்லமாட்டேன், மரத் துண்டுகள் மரச்சாமான்களாக மாறி

உதவுவதைப்போல சனாதன தர்மம், சத்திய தர்மம் எனப்படும் ஆத்ம தர்மமும், கிருஹஸ்த தர்மம், வானப்ரஸ்த தர்மம், வர்ண தர்மம், ஸ்த்ரீ தர்மம், புருஷ தர்மம் எனப் பலவிதமாக உருவெடுக்கிறது. எல்லாத் தர்மங்களினுடையவும் அடிப்படைத் தத்துவம் ஆத்ம தர்மம் ஒன்றே. அதைப் பயன்படுத்திக் கொள்வது எப்படி?

பலதரப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள அவைகளுக்குத் தக்கபடி, விதவிதமான பெயர்கள் தந்து, அவைகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். மரத்துண்டை அறுத்து, செதுக்கி, இணைத்துப் பிணைத்து உருவாக்குவதைப் போல, மேற்கொள்ளும் தர்மங்களுக்கு எந்தப் பெயரை ஈந்தாலும் சரியே. ஆனால் அவைகள் ஆத்ம தர்மத்தை ஆதாரமாகக் கொண்டிருக் வேண்டும். எவ்வளவு முயன்றாலும் மரத்தினால் செய்த பொருள்களைத் திரும்பவும் மரமாக்க முடியுமா? அது போலவே உலகியல் தர்மங்கள் ஆத்ம தர்மத்தை ஆதரமாகக் கொண்டு எழுந்தாலும், உலகியல் தர்மங்களை ஆத்ம தர்மம் என அழைக்க முடியாது. அப்படி அழைப்பது உண்மைக்குப் புறம்பானது.

தர்மம் என்பது நன்னெறிப் பாதை. அந்த நன்னெறிப்பாதையே வாழ்வின் ஒளிவிளக்கு. அந்த ஒளியே ஆனந்தம், புனிதத் தன்மை, தெய்வீகம், சாந்தி, உண்மை , மனவலிமை இவைகளால் குறிக்கப்படுவதே தர்மம். தர்மமே யோகம், ஐக்கியம், ஏகத்துவம்; தர்மமே சத்தியம், நீதி, புலனடக்கம், கௌரவம், பிரேமை, சிறப்பு, நன்மை, தியானம், இரக்கம், அஹிம்சை ஆகியவையாகும். மேற்கண்ட குண நலன்கள் கொண்டதாக இருப்பதால் தான், தர்மம் யுக யுகங்களாக நிலைத்து நிற்கிறது. தர்மம் ஒரு மனிதனை எல்லா உயிர்களிடத்ததும் ஒரே மாதிரியான அன்பு கொள்ளும்படிச் செய்கிறது. ஒற்றுமையை வளர்க்கிறது. ஒழுக்கக் கட்டுப்பாட்டில் மிக உயர்ந்த நிலை அரவழியை மேற்கொள்ளுவதே. மிகுந்த பயனைத் தருவதும் அதுவே.

எல்லா விளக்கமும் தர்மத்தையே ஆதாரமாகக் கொண்டவை. சத்தியமும், தர்மமும் ஒன்றோடொன்று இணைந்தவையே. பிரபஞ்சத்தின் விதிமுறை சத்தியமே. இதுவே சூரியன் சந்திரன் நியமத் தவறாத சுழற்சிக்குக் காரணம். ஞானத்தை அளிக்கும் மந்திரங்கள், வேதங்கள் எல்லாம் தர்மமே.

நீதிநெறிகளை அனுசரித்து இயற்றப்படும் செயல்களில் எல்லாம் சந்திய தர்மத்தைக் காணலாம். "தர்மம் எங்கே இருக்கிறதோ, கிருஷ்ணன் அங்கே இருப்பார். தர்மமும் கிருஷ்ணனும் உள்ள இடத்தில் வெற்றி நிச்சயம் !" என்ற வாக்கியத்தைப் பாகவதத்தில் காணலாம். இறைவன் தர்மஸ்வரூபன். இந்தப் பிரபஞ்சம் இறைவனது உடல், அதனால் இந்த உலகத்தையே தர்மஸ்வரூபம் எனலாம், இல்லையா? இதை மறுப்பவர்கள் யார்? யாரும் மறுக்க மாட்டார்கள்; மறுக்கவும் முடியாது.